Kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

நேரம்: 3.00 மணி

மதிப்பெண்கள்:90

பகுதி – அ

20x1=20

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1. ஒரு நிறுமம் தனது பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம் பற்றி அறிக்கையை ________ நாட்களுக்குள் நிறும பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும்.
   அ) 14 நாட்கள் ஆ) 21 நாட்கள் இ) 30 நாட்கள் ஈ) 60 நாட்கள்
2. நுகர்வோரின் உரிமைகள் அவர்கள் கொண்டுள்ள நிலையில் ________ ஆகும்.
   அ) கடமைகள் ஆ) பொறுப்புகள் இ) விற்பனை அதிகப்படுத்துதல் ஈ) அளவீடுகள்
3. சிறந்த வேலை செயல் திறனை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் திறன் நிலைகளை எது மேம்படுத்துகிறது ?
   அ) தேர்ந்தெடுப்பு ஆ) பயிற்சி இ) செயல்திறன் மதிப்பீடு ஈ) ஆட்சேர்ப்பு
4. மேலாண்மை என்பது முன்கணிப்பு செய்தல், திட்டமிடுதல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது என்று கூறியவர் ________
   அ) F.W. டேலர் ஆ) பீட்டர் F. டிரக்கர் இ) ஹென்றி ஃபோயல் ஈ) ஜார்ஜ் ஒடியோர்ன்
5. செபியின் தலைமையகம் ________ ஆகும்.
   அ) மும்பை ஆ) தில்லி இ) கல்கத்தா ஈ) சென்னை
6. மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் எத்தனை பேர் ?
   அ) 3 ஆ) 4 இ) 2 ஈ) 6
7. ________ உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாக செய்யப்படுகிறது ?
   அ) விதிவிலக்கு மேலாண்மை (MBE) ஆ) குறியிலக்கு மேலாண்மை (MBO)
   இ) முதுகலை வணிக நிர்வாகம் (MBA) ஈ) முதுகலை வணிக மேலாண்மை (MBM)
8. பணியாளர்களை தேர்ந்தெடுப்பதில் பின்வருவனவற்றில் எவை பல்வேறு பண்புகளை அளவிட பயன்படுகிறது ?
   அ) உடல் பரிசோதனை ஆ) உளவியல் சோதனை
   இ) நிபுணத்துவம் சோதனைகள் ஈ) திறனாய்வு சோதனை
9. நிறுமத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் ________ க்கு பேச உரிமை இல்லை.
   அ) இயக்குநர் ஆ) தணிக்கையாளர் இ) பகராள் ஈ) பங்குநர்
10. பொருத்துக.
    1) வால் தெரு – i) கனடிய பங்குச்சந்தை
    2) லம்பார்டு தெரு – ii) பாம்பே பங்கு சந்தை
    3) டொராண்டோ – iii) இலண்டன் பங்கு சந்தை
    4) தலால் தெரு – iv) நியூயார்க் பங்கு சந்தை

    அ) 1) - i) 2) - iii) 3) - iv) 4) - ii)
    ஆ) 1) - iv) 2) - iii) 3) - i) 4) - ii)
    இ) 1) - iv) 2) - i) 3) - ii 4) - iii
    ஈ) 1) - iii) 2) - iv) 3) - i) 4) - ii

11. மனிதவள மேலாண்மை என்பது ________ மற்றும் ________ ஆகும்.
அ) அறிவியல் மற்றும் கலை ஆ) வரலாறு மற்றும் புவியியல்
இ) கோட்பாடு மற்றும் நடைமுறை ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை
12. கீழ்க்கண்டவற்றுள் எது பங்குகள் மற்றும் பத்திரங்களை வாங்கி, விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது.
அ) குடும்ப சந்தை ஆ) உள்ளூர் சந்தை
இ) தயாரிப்பு பொருள் சந்தை ஈ) பங்கு சந்தை
13. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது ________
அ) மோடம் ஆ) போர்டல் இ) சிபியு ஈ) வெப்நராங்
14. புதிய பொருளாதாரக் கொள்கை ________ ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015
15. வணிக தொழில் முனைவோரைச் சாராத பணியைக் கண்டறி
அ) கழிவு ஆ) விற்பனை இ) வாங்கல் ஈ) தயாரிப்பு
16. கீழ் கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது ?
அ) இடக் கூறு ஆ) விலை கூறு இ) திட்டக் கூறு ஈ) பொருள் கூறு
17. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார் ?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) ஜான் எப். கென்னடி
இ) மகாத்மா காந்தி ஈ) ரால்ப் நேடர்
18. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர் யார் ?
அ) உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஆ) முதலமைச்சர்
இ) நிதி மந்திரி ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல
19. பின்வருவனவற்றுள் எது முக்கிய பணிகள் அல்ல ?
அ) திட்டமிடுதல் ஆ) பணியமர்த்துதல்
இ) முடிவெடுத்தல் ஈ) ஒழுங்கமைத்தல்
20. இரண்டு முக்கிய வாணிப சூழல்கள் ________ மற்றும் ________ ஆகும்.
அ) நேர்மறை மற்றும் எதிர்மறை
ஆ) நல்லது மற்றும் கெட்டது
இ) உட்புறச் சூழல் மற்றும் வெளிப்புறச் சூழல்
ஈ) அனுமதிக்கத்தக்கது மற்றும் அனுமதிக்க முடியாது

## பகுதி – ஆ

7x2=14

**II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21. உட்புறச் சூழல் என்றால் என்ன ?
22. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
23. OTCEI – சிறுகுறிப்பு வரைக.
24. ஜான் எப். கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை ?
25. மனிதவள மேலாண்மையின் இயல்புகள் ஏதேனும் இரண்டு கூறுக.
26. சந்தை என்றால் என்ன ?

27. தெளிவான தொழில் முனைவோருக்கு ஏதேனும் நான்கு உதாரணம் தருக.
28. 'பகராள்' சிறு குறிப்பு வரைக.
29. திட்டமிடுதல் என்றால் என்ன ?
30. முழுநேர இயக்குநர் என்பவர் யார் ?

## பகுதி – இ

**III எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x3=21**
**வினா எண் 40–க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31. ஆட்சேர்ப்பு முறையில் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன ?
32. மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் யார் ?
33. இரண்டு வகை கீறல்களின் வரைபடத்தை வரைக.
34. புறத் தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன ?
35. டெய்லரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை ?
36. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன ?
37. தற்போதைய / இருக்கின்ற சரக்கு என்றால் என்ன ?
38. இரண்டாம் நிலைச் சந்தை சிறு குறிப்பு வரைக.
39. காளை மற்றும் கரடி விளக்குக.
40. மாற்று முறை ஆவணத்தில் மேலெழுதிட இடம் போதவில்லையென்றால் எவ்வாறு மேலெழுதலாம் ?

## பகுதி – ஈ

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35**

41. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) எல்பிஜி (LPG)யின் சிறப்பு அம்சங்கள் விளக்குக.

42. அ) பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

(அல்லது)

ஆ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் என்ன ? (ஏதேனும் 5)

43. அ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி.

44. அ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சினைகளை விவரி. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5)

45. அ) மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக.

46. அ) செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக. (ஏதேனும் 5)

47. அ) பணிவழி பயிற்சிக்கும், பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

(அல்லது)

ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள். (ஏதேனும் 5)

***/***